ந.க.எண்.194/ 2022/அ1.

தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகம்,
குலசேகரம்.
நாள் : 08.04.2022

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கன்னியாகுமரி மாவட்டம், குலசேகரம் தேர்வு நிலை பேரூராட்சியில் பொதுசுகாதார பணிகள் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மை திட்ட செயலாக்கத்திற்கு அயலாக்க முறையில் தேவையான நபர்களை கொண்டு செயல்படுத்த தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இரண்டு உறை முறையில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளிகள் 26.04.2022 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 வரை குலசேகரம் தேர்வு நிலை பேரூராட்சியில் சமர்ப்பிக்கலாம். வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 25.04.2022 மாலை 5.00 மணி வரை பட்டியலில் கண்டுள்ள தொகையை இப்பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். அல்லது http://www.tenders.tn.gov.in/ என்ற இணையதளத்தில் இருந்து இலவசமாகவும் பதிவிறக்கம் செய்யலாம். ஒப்பந்தப்புள்ளிகளை இரண்டு உறை முறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**உறை 1- (தொழில் நுட்ப உறை)** - Annexure II Form-1, Annexure II Form- 2 மற்றும் வைப்புத்தொகை, செயலாக்கக்கட்டணத்திற்கான இரண்டு வரைவோலைகள் ஆகியன வைத்து மூடி முத்திரையிடப்பட வேண்டும்.

**உறை 2-** Financial Proposals - Annexure – III with Schedule A வைத்து மூடி முத்திரையிடப்பட வேண்டும்.

உறை I மற்றும் II னை ஒரு மேலுறையில் வைத்து மூடி முத்திரையிடப்பட்டு பணியின் பெயர் ஒப்பந்ததாரர் விவரம் குறிப்பிடப்பட்டு செயல் அலுவலர், குலசேகரம் பேரூராட்சிக்கு முகவரியிடப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த நாள் வேலைநாள் வரை ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்படலாம். ஒப்பந்தப்புள்ளி படிவத் தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது.

| வ. எண் | விபரம் | ஒப்பந்த படிவ தொகை ரூ | வைப்புத் தொகை ரூ | செயலாக்கக்கட்டணம் ரூ |
|---|---|---|---|---|
| 1 | குப்பைசேகரம், பொதுசுகாதார பணிகள் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மை பணிகள், திடக்கழிவு வாகனம் ஓட்டுதல் பணிக்கு அயலாக்க முறையில் நபர்களை கொண்டு செயல்படுத்துதல். | 1560 | 66,000 | 1000/- |

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. மனித ஆற்றலை வழங்கும் நிறுவனம் குறைந்தபட்சம் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மனித ஆற்றலை வழங்கிய மூன்று ஆண்டுகள் அனுபவம் இருக்க வேண்டும்.
2. மேற்படி நிறுவனத்தின் வருடாந்திர பணபரிவர்த்தனை (Annual Turnover) கடந்த மூன்று நிதியாண்டுகளுக்கு ரூ.50.00 லட்சத்திற்கு மேல் இருக்க வேண்டும். அதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.
3. வைப்புத் தொகை ரூ.66.000/- மற்றும் செயலாக்க கட்டணம் ரூ.1000/- ஆகியவற்றிற்கு தனித்தனியே Executive Officer, Kulasekharam Town Panchayat என்ற பெயரில் வங்கி வரைவோலைகள் தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும்.
4. அடிப்படை ஊதியத்தில் எந்தவித மாற்றமும் செய்யக்கூடாது. சேவைக்கட்டணத்திற்கு மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
5. வைப்புத் தொகை செலுத்தாத ஒப்பந்தப்புள்ளி மற்றும் காலம் கடந்து வரும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
6. ஒப்பந்தப்புள்ளியை எந்தவித காரணமும் காட்டாமல் ரத்து செய்யவோ அல்லது மாற்றி வைக்கவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
7. ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் மதிப்பீடு செய்யப்பட்டு தொழில்நுட்ப தகுதி பெற்ற நிறுவனங்களின் விலை ஒப்பந்தப்புள்ளிகள் (Price Bid) மட்டும் திறந்து பரிசீலிக்கப்படும்.
8. குறைந்த நிரக்கு ஒப்பந்தப்புள்ளி மன்ற அங்கீகாரத்திற்குட்பட்டது.
9. ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்துடன் அனைத்து நிபந்தனைகளுடன் கூடிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ரூ.50/-க்கான முத்திரைத்தாளில் சமர்ப்பிக்க வேண்டும்.
10. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒவ்வொரு மாதமும் பணியாளர்களுக்கான பணிச்சான்றுடன் ஒப்பந்தத் தொகைக்கான கேட்பு சமர்ப்பித்தவுடன் தொகையை மேற்படி நிறுவனத்தின் வங்கி கணக்கில் செலுத்தப்படும். தொகை வரவானதற்கான ஒப்புதல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
11. நிறுவனம் ஒப்பந்ததொகை கோரும்போது பணியாளர்களுக்கான முந்தைய மாத ESI மற்றும் EPF செலுத்திய ஆவணத்துடன் கேட்பு சமர்ப்பித்தால் மட்டுமே அடுத்த மாத ஒப்பந்த தொகை வழங்கப்படும்.

செயல் அலுவலர்,
குலசேகரம் தேர்வு நிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

பெறுநர்: அலுவலக விளம்பர பலகை

நகல்:-

1. மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,
2. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், நாகர்கோவில், அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3, பேரூராட்சி செயல் அலுவலர்கள், பொன்மனை,திற்பரப்பு, திருவட்டார், ஆற்றூர், மற்றும் வேர்கிளம்பி பேரூராட்சிகள் (விளம்பரம் பலகையில் விளம்பரம் செய்ய)
4. வட்டார வளர்ச்சி அலுவலர், திருவட்டார் ஊராட்சி ஒன்றியம் (விளம்பரம் பலகையில் விளம்பரம் செய்ய)